# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2059 - 2018 පෙබරවාරි මස 16 වැනි සිකුරාදා - 2018.02.16

*2059 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | | | |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 174 | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 174 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***- *நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2018, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படுந் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகுந் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகுந் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2018, மாச்சு மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



*173-B 81252-403 (2018/02)*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

MOD/DEF/10/03/WTD/6/2017.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவரது பெயரின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து இலங்கை வான் படை அதிகாரவாணையிலிருந்து அகற்றப்படுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

பிளைங் ஒபிசர் திஸானாயக்க முதியன்சேலாகே பாதிய காஞ்சன திஸானாயக்க (03107) நிர்வாகம் - 22.12.2017

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, சனவரி 26.

2-492

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையினால் 2017, திசெம்பர் 15 ஆந் திகதியன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

“கட்டுகஸ்தொட்டவைச் சேர்ந்த இலங்கன் முதியன்சலாகே யட்டவரகெதர சுனில் யட்டவர மற்றும் இலங்கை முதியன்சலாகே யட்டவரகெதர காஞ்சனா உதயங்கனி யட்டவர மற்றும் பத்தரமுல்லைவைச் சேர்ந்த இலங்கன் முதியன்சலாகே யட்டவரகெதர உதயகுமார யட்டவர என்போர், (டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயின் அடுத்துறுநர்களான) டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ சார்பில் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. பீ. ராஜரத்ன அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, யூலை 09 ஆந் திகதிய மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீபீடபிள்யூ மீகஹாவெல அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, யூலை 10 ஆந் திகதிய 1779/391 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

2017, செத்தெம்பர் 29 ஆந் திகதியன்றுள்ளவாறாக முப்பத்தொன்பது இலட்சத்து அறுபத்தையாயிரத்து அறுநூற்றியறுபத்தாறு ரூபா தொண்ணூற்றைந்து சதம் (ரூ. 39,65,666.95) கொண்ட தொகையும், 2017, செத்தெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை முப்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐந்நூற்றியொன்பது ரூபா எண்பத்திநான்கு சதம் (ரூபா 35,56,509.84) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஸ்பொட் ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (ஆண்டொன்றுக்கு 8%) வட்டியும், சொல்லப்பட்ட இலங்கன் முதியன்சலாகே யட்டவரகெதர சுனில் யட்டவர மற்றும் இலங்கன் முதியன்சலாகே யட்டவரகெதர காஞ்சனா உதயங்கனி யட்டவர மற்றும் இலங்கன் முதியன்சலாகே யட்டவரகெதர உதயகுமார யட்டவர என்போரிடமிருந்து 1779/391 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 1779/391 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தணைகளுக்கிணங்க டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, முப்பத்தொன்பது இலட்சத்து அறுபத்தையாயிரத்து அறுநூற்றியறுபத்தாறு ரூபா தொண்ணூற்றைந்து சதம் (ரூ. 39,65,666.95) கொண்ட தொகையையும், 2017, செத்தெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை முப்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐநூற்றியொன்பது ரூபா எண்பத்திநான்கு சதம் (ரூபா 35,56,509.84) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று மூன்று

மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஸ்பொட் ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (ஆண்டொன்றுக்கு 8%) வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணியையும் கட்டிடத்தையும் வளவுகளையும் அதன்மீதுள்ள வேறெல்லா வற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்ப தற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுதொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டு முறிமூலம் இலங்கன் முதியன்சலாகே யட்டவரகெதர சுனில் யட்டவர என்பவரினால் டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும், கட்டிடங்களும், வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 1779/391 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் பாத்த தும்பரவின் பள்ளேகம்பஹாக் கோரளையில் பள்ளேதலவின்னவில் அமைந்துள்ளதும் தொட்டுபொல வத்த மறுபெயர் கரகஸ்கொடவத்த மறுபெயர் கரௌகஸ்கொட வத்த எனவழைக்கப்படும் காணியிலிருந்து உ. நி., பீ. டபிள்யூ. விஜேவர்த்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட (எல்லைகளும் பரப்பளவும் 2012.06.20 ஆந் திகதியன்று உ. நி., டீ. எம். ஜயரத்ன என்பவரினால் சரிபார்ககப்பட்டன) 1990, நவெம்பர் 19 ஆந் திகதிய 4343 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: பரப்பளவில் இது, இரண்டு றூட்களை (0ஏ.2றூ.0பே.) கொண்டுள்ளதுடன், பின்வரும் எல்லைகளையுமுடையது - வடக்கு : அதே காணியின் எஞ்சியுள்ள பாகம் ; கிழக்கு : கரௌகஸ்கொட ஹேன ; தென் கிழக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் 3 ; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் 3; மற்றும் மேற்கு : அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் 1.

லக்ஷ்மன் சில்வா,
பிரதான நிறைவேற்றலுவலர்.

டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

2-566

---

### சம்பத் வங்கி பீ. எல். சீ.

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

சீ. டபிள்யூ. எஸ். பொன்சேக்கா
கணக்கு இல.: 1029 5380 7780

2017, யூலை மாதம் 27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

“PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110, சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக 2016, ஒற்றோபர் 18 ஆந் திகதியிடப்பட்ட இல. 00042552484 ஐ ஏற்ற உரிமைச் சான்றிதழின் கீழ் எச். எம். நாகொடவித்தான என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2016, ஒற்றோபர் 12 ஆந் திகதிய ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொம்பஞ்ஞாகே வருன சன்ஜீவ பொன்சேக்கா என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 00042552484 ஐ ஏற்ற உரிமைச் சான்றிதழின் கீழ் எச். எம். நாகொடவித்தான என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2016, ஒற்றோபர் 12 ஆந் திகதிய ஈட்டுமுறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் எழுபத்தி எட்டு இலட்சத்து இருபத்தி ஓராயிரத்து தொண்ணூற்றி ஆறு ரூபா அறுபத்தி ஆறு சதம் (ரூபா 78,21,096.66) 2017, யூலை 2 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சி இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட எழுபத்தி எட்டு இலட்சத்து இருபத்தி ஓராயிரத்தி தொண்ணூற்றி ஆறு ரூபா அறுபத்தி ஆறு சதம் (ரூபா 78,21,096.66) 2017, யூலை 3 ஆந் திகதி முதல் இல. 00042552484 ஐ ஏற்ற உரிமைச் சான்றிதழின் கீழ் எச். எம். நாகொடவித்தான என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, ஒற்றோபர் 12 ஆந் திகதிய எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி மூன்று இலட்சத்து ஐம்பத்தி எட்டாயிரத்து எழுநூற்றி ஐம்பத்து எட்டு ரூபா எழுபத்தேழு சதம் (ரூ. 73,58,758.77) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து சைபர் வீதம் (13.50%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 00042552484 ஐ ஏற்ற உரிமைச் சான்றிதழின் கீழ் எச். எம். நாகொடவித்தான என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட

2016, ஒற்றோபர் 12 ஆந் திகதியிடப்பட்ட எனும் ஈட்டு முறியின்மீது பிணையாக வைக்கப் பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.”.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொரட்டுவை பிரதேச செயலாளர் அலுவலக பிரிவின் மற்றும் மொரட்டுவை மாநகர சபை எல்லைகளுக்குள் கட்டுபெத்தை கிராமத்தில் அமைந்த காணித்துண்டிற்கு நில அளவை ஆணையாளரினால் கெடெஸ்ட்டர் வரைபட இல. 520205 (கட்ட இல. 9) ஐ ஏற்ற காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 296 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : காணித்துண்டு இல. 97 ; கிழக்கு : காணித்துண்டு இல. 297 ; தெற்கு: காணி துண்டு இல. 125 மற்றும் மேற்கு : காணித்துண்டு இல. 95 மற்றும் 96 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் சைபர் மூன்று சைபர் நான்கு ஹெக்டேயர்கள் (0.0304 ஹெக்டேயர்கள்) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட கெடெஸ்ட்டர் வரைபட இல. 520205 இற்கு அமைவாக இல. 00042552484 ஐ ஏற்ற உரிமைச் சான்றிதழின் கீழ் தெல்கந்தை - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட கெடெஸ்ட்டர் வரைபட இல. 520205 இல் காட்டப்பட்ட லொட் 125 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-583/1

---

**சம்பத் வங்கி பீ. எல். சீ.**

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

ஜீ. எஸ். ஆர். வித்தானாரச்சி மற்றும் ஆர். என். பீ. ஏ. பி. எம். எஸ். என். கே. பிபிலெ

கணக்கு இல.: 0161 5000 0185

2017, ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

“PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் தனது பதிவு அலுவலகத்தைக்கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக வெல்லவாய பிரசித்த நொத்தாரிசான ரீ. எம். எம். தென்னகோன் என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, செத்தெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 1888 மற்றும் பதுளை பிரசித்த நொத்தாரிசான கே. ஏ. பீ. காஹாந்தவ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, மே 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 1609 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கஜநாயக்க சுரங்க ருக்மன் வித்தானாரச்சி மற்றும் ஜயசுந்தர ராஜகருண பண்டித்த அத்தநாயக்க பண்டாரநாயக்க முதியன்சேலாகே சுனேத்ரா நில்மினி குமாரி பிபிலெ என்பவர்களில் கடன்பட்டவர் என்ற வகையில் கூறப்பட்ட கஜநாயக்க சுரங்க ருக்மன் வித்தானாரச்சி என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 1888 மற்றும் 1609 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் ஐம்பத்தி ஆறு இலட்சத்து பதின்ஆறாயிரத்து நானூற்றி ஐம்பத்தி நான்கு ரூபா நாற்பத்து ஒன்பது சதம் (ரூபா 56,16,454.49) 2017, ஒற்றோபர் 10 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்துடன், குறிப்பிடப்பட்ட ஐம்பத்தி ஆறு இலட்சத்து பதின்ஆறாயிரத்து நானூற்றி ஐம்பத்தி நான்கு ரூபா நாற்பத்து ஒன்பது சதம் (56,16,454.49) 2017, ஒற்றோபர் 11 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 1888 மற்றும் 1609 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபது இலட்சத்து எண்பத்தி ஓராயிரத்து இருநூற்றி ஐம்பது ரூபா (ரூபா 20,81,250) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு வீதம் (16%) மேலும் முப்பத்தி ஒரு இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து அறுநூறு ரூபா (ரூபா 31,34,600) கட்டணத்திற்கு Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு மூன்று வீதம் (3%) (Floor rate of 14% per annum) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1888 மற்றும் 1609 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.”.

**அட்டவணை**

ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், புத்தள பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் வெகம்பத்து கோரலே (வெல்லஸ்ஸ) பிபிலெ கிராம அலுவலர் பிரிவின் பிபிலெ

கிராமத்தில் அமைந்த “சிட்டி கார்டன்ஸ் எனும் பீரியபெத்தெ வத்த)” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். சிறிசேன உனவட்டுன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2009, ஏப்பிறல் 16 ஆந் திகதியிடப்பட்ட (2009, பெப்புருவரி 25-27 ஆந் திகதிகளின் நில அளவீடு செய்யப்பட்டு உப பிரிவாக்கப்பட்டது) 797 எனும் வரைப்படத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 20 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : வீதி மற்றும் லொட் 19 ; கிழக்கு : வீதி ; தெற்கு : வீதி மற்றும் மேற்கு : வீதி மற்றும் லொட் 21 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரெண்டு தசம் சைவர் இரண்டு பேர்ச்சுகள் (0ஏ.0றூ.12.02பே.) அல்லது 0.0304 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 797 எனும் வரைப்படத்திற்கு அமைவாக மொனராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் கே 101/268 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இல. 797 எனும் வரைபடத்தின் லொட் 51A மற்றும் 51 E இல் குறிப்பிடப்பட்ட வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-583/2

---

**சம்பத் வங்கி பீ. எல். சீ.**

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

நந்தன ஸ்ட்டோர்ஸ்
கணக்கு இல.: 0145 1000 0405

2017, ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

“PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக பதுளை பிரசித்த நொத்தாரிசான கே. ஏ. பீ. காஹாந்தவ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப் பட்ட 2014, சனவரி 2 ஆந் திகதியிடப்பட்ட இல. 689, 2015, மாச்சு 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 1153, 2015, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 1363 மற்றும் 2016, பெப்புருவரி 2 ஆந் திகதியிடப்பட்ட இல. 1477 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெயர் மற்றும் வடிவில் “செவன்டீன் சீ சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட்” எனும் கம்பனியை பங்காளர்களாக கொண்டு நடாத்தும் கடமைப்பட்டுள்ளார் எனும் வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஹேரத் முதியன்சேலாகே ஜகத் குமார, ஹேரத் முதியன்சேலாகே காமினி ஹேரத் மற்றும் ஹேரத் முதியன்சேலாகே நிஹால் ஹேரத் என்பவர்களில் கடன்பட்டார் எனும் வகையில் ஹேரத் முதியன்சேலாகே ஜகத் குமார, ஹேரத் முதியன்சேலாகே காமினி ஹேரத், ஹேரத் முதியன்சேலாகே நிஹால் ஹேரத் மற்றும் ஹேரத் முதியன்சேலாகே ஜயந்த ஹேரத் என்பவர்கள் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள் 689, 1153, 1363 மற்றும் 1477 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் மூன்று கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதினாயிரத்து முந்நூற்று ஏழு ரூபா எண்பத்தி ஒன்பது சதம் (ரூபா 36,249,307.89) 2017, ஒற்றோபர் 10 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட மூன்று கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதினாயிரத்து முந்நூற்று ஏழு ரூபா எண்பத்தி ஒன்பது சதம் (ரூபா 36,249,307.89) 2017, ஒற்றோபர் 11 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 689, 1153, 1363 மற்றும் 1477 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பது இலட்சத்து ஆறாயிரத்து நூறு ரூபா (ரூபா 5,006,100) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் இரண்டு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து ஐநூற்று எழுபது ரூபா அறுபத்தி ஆறு சதம் (ரூபா 29,488,570.66) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 689, 1153, 1363 மற்றும் 1477 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.”.

### அட்டவணை

ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், வெல்லவாய பிரிவின் - புத்தள கோரளே, புத்தள பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் மீகாஹாவெல கிராம அலுவலர் பிரிவின் மீகாஹாவெல கிராமத்தில் அமைந்த (தொ.பே. 244031 மற்றும் 322816) "வேர அராவெ வத்த லெவி ஆர மூக்கலான மற்றும் வெலி ஆர கும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். பூவாட் இஸ்மையில் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1976, திசெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 1060 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கு : பிரதான வீதிக்கான ஒதுக்கம் ; கிழக்கு : ஜே. எம். குலதிலக்க என்பவர் உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி ; தெற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி மற்றும் மேற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நூற்றி இருபது அடிகள் நீளமும் மற்றும் 35 அடிகள் அகலமுமான விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் மொனராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் எம் 8 / 158 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அண்மைய நில அளவீட்டிற்கு அமைவாக மேற்கூறப்பட்ட காணி கீழ்க்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது:

மீகாஹாவெல கிராமத்தில் அமைந்த (தொ.பே. 244031 மற்றும் 322816) "வேர அராவெ வத்த லெவி ஆர மூக்கலான மற்றும் வெலி ஆர கும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி. பீ. இலங்கசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, மே 21 ஆந் திகதியிடப்பட்ட இல. Mo/ 9229 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : வீதிக்கான ஒதுக்கம் (H) ; கிழக்கு : ஜே. எம். குலதிலக்க என்பவர் உரிமம் கோரும் காணி ; தெற்கு : அதே காணியின் லொட் B மற்றும் மேற்கு : ஜே. எம். குலதிலக்க என்பவர் உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் ஐந்து தசம் ஒன்று ஐந்து பேர்ச்சுகள் (0ஏ.0றூ.15.15பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் மொனராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் ஜே. 01/119 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-583/3

### சம்பத் வங்கி பீ. எல். சீ.

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

செவன்டீன் சீ சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0113 1000 0509

2017, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக வெல்லவாய பிரசித்த நொத்தாரிசான ரீ. எம். எம். தென்னகோன் என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, ஒற்றோபர் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 2428, பதுளை பிரசித்த நொத்தாரிசான கே. ஏ. பீ. காஹாந்தவ என்பவரால் எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2016, பெப்புருவரி 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 1484 மற்றும் 2017, ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 2045 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனி சட்டவாக்கத்திற்கமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்ட பதிவு இல. பீவீ 61979 ஐ ஏற்ற பெயர் மற்றும் வடிவில் "செவன்டீன் சீ சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியின் பேரில் கடன்பட்டார் எனும் வகையில் கடமைப்பட்டுள்ள பிரசன்ன தலதாவத்த என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள் 2428, 1484 மற்றும் 2045 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் இரண்டு கோடியே அறுபத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஒன்பதினாயிரத்து எண்ணூற்று ஏழு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூபா 26,779,807.94) 2017, செத்தெம்பர் 03 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட இரண்டு கோடியே அறுபத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஒன்பதினாயிரத்து எண்ணூற்றி ஏழு ரூபா தொண்ணூற்றி நான்கு சதம் (ரூபா 26,779,807.94) 2017, செத்தெம்பர் 04 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 2428, 1484 மற்றும் 2045 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (15,000,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு வீதம் (16%) மேலும் தொண்ணூற்றி இரண்டு இலட்சம் ரூபா

(ரூபா 9,200,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு தசம் ஐந்த வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2428,1484 மற்றும் 2045 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பியகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பியகம பிரதேச சபை எல்லைகளுக்குள் பஹல பியன்வில கிராம அலுவலர் பிரிவின் இஹல பியன்வில மற்றும் பஹல பியன்விலவில் அமைந்த மங்கட வீதி, வரிமதிப்பீட்டு இல. 61/5 ஐ ஏற்ற "தம்புகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் வீ எஃப் ஜே. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 9027 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கு : எச் எசிலின் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி ; தென்கிழக்கு : அதே காணியின் ஒரு பகுதி ; தென் மேற்கு : அதே காணியின் ஒரு பகுதி மற்றும் வடமேற்கு : லொட் 2 (12 அடிகள் அகல வீதி), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச்சுகள் (0ஏ.0றூ.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 9027 எனும் வரைப்படத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் என் 308/08 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2007, மாச்சு 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 2750 எனும் வரைபடத்திற்கு அமைவாக அண்மைய நிலஅளவீட்டிற்கு அமைய கீழ்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இஹல பியன்வில மற்றும் பஹல பியன்விலவில் அமைந்த மங்கட வீதி, வரிமதிப்பீட்டு இல. 61/5 ஐ ஏற்ற "தம்புகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2017, மாச்சு 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 2750 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடகிழக்கு : எச். எசிலின் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி ; தென்கிழக்கு : அதே காணியின் ஒரு பகுதி ; தென் மேற்கு : அதே காணியின் ஒரு பகுதி மற்றும் வடமேற்கு : இல. 9027 எனும் வரைபடத்தின் லொட் 2 (12 அடிகள் அகல வீதி), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச்சுகள் (0ஏ.0றூ.30பே.) அல்லது 0.0759 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2750 எனும் வரைப்படத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் என் 308/08 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-584

---

### வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி (பதிவு இல. பீபி 4847) பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இல.: சப்பாணி சந்திரசேகர் மற்றும் நளினி நட்டாஷா சந்திரசேகர் (கேம்பிரிஜ் ரிரேடர்ஸ்ஸின் பங்குதாரர்கள்)

"கடப்பாடுடையவர்களான சப்பாணி சந்திரசேகர் (தேசிய அடையாள அட்டை இல. 602010082 V) மற்றும் நளினி நட்டாஷா சந்திரசேகர் (தேசிய அடையாள அட்டை இல. 698163798 V) (கேம்பிரிஜ் ரிரேடர்ஸ்ஸின் பங்குதாரர்கள்) ஆகியோர், வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். குணதிலக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2014, ஒற்றோபர் 23 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 476 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும்; வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கிக்கு சொல்லப்பட்ட முறிமூலம் 2017, ஒற்றோபர் 19 ஆந் திகதியன்றுள்ளவாறு மேலதிகப்பற்று வசதியின் பொருட்டு மூன்று கோடி எண்பது இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று ரூபா பதினான்கு சதம் (ரூபா 38,062,783.14) கொண்ட தொகை மற்றும் இறக்குமதி கடன் வசதியின்பொருட்டு இரண்டு கோடி ஒரு இலட்சத்து அறுபத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து இரண்டு ரூபா தொண்ணூற்றொன்பது சதம் (ரூபா 20,169,852.99) கொண்ட தொகை மற்றும் உண்டியல்கள் பெறுகை வசதியின்மீது நாற்பத்தாறு இலட்சத்து தொண்ணூற் றேழு ஆயிரத்து தொளாயிரத்து இருபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூபா 4,697,925.19) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்; அத்துடன் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ்

வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி பணிப்பாளர்கள் சபையானது, விளம்பரச் செலவுகள், உறப்பட்ட ஏனைய கட்டணங்கள் மற்றும் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றையும் கழித்து ஆகியவற்றுடன் சேர்த்து 2017, ஒற்றோபர், 20 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை மேலதிகப்பற்று வசதியின்பொருட்டு மூன்று கோடி எண்பது இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று ரூபா பதினான்கு சதம் (ரூபா 38,062,783.14) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு இருபத்து நான்கு சதவீத (24%) மேலும் வட்டியுடன் சொல்லப்பட்ட தொகை மூன்று கோடி எண்பது இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று ரூபா பதினான்கு சதம் (ரூபா 38,062,783.14)மற்றும் 2017, ஒற்றோபர் 20 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை ஒரு கோடி நாற்பத்தேழு இலட்சத்து அறுபத்து மூன்று ஆயிரத்து அறுநூற்றொரு ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 14,763,601.76) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினாறு சதவீத (16%) மேலும் வட்டியுடன் இரண்டு கோடி ஒரு இலட்சத்து அறுபத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து இரண்டு ரூபா தொண்ணூற்றொன்பது சதம் (ரூபா 20,169,852.99) கொண்ட தொகை மற்றும் 2017, ஒற்றோபர் 20 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை முப்பத்து நான்கு இலட்சத்து முப்பத்தொன்பது ஆயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா எண்பது சதம் (ரூபா 34,39,666.80) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு பதின்மூன்று சதவீத (13%) மேலும் வட்டியுடன் நாற்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்றேழு ஆயிரத்து தொளாயிரத்து இருபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூபா 4,697,925.19) கொண்ட தொகையை அறவிடுவதற்காக, ஈட்டு முறி இல. 476 இன் மூலம் வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகள் சொக்மன் அன்ட் சமரவிக்கிரம அவர்களால் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், மாளிகாகந்தை கிராம அலுவலர் பிரிவு, வட்டார இல. 27, மாளிகாகந்தையில் அமைந்துள்ளதும் ஸ்ரீ வஜிரஞான மாவத்தை வழியே அமைந்துள்ளதும் ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, வரிமதிப்பு இல. 71 ஐ தற்போது கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எல். என். பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1998, ஓகத்து 31 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 750 இல் குறிப்பிடப்பட்டு துண்டு எக்ஸ் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜீ. எம். பீ. பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 06.02.1996 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5016 இல் குறிப்பிடப்பட்ட துண்டு எச் மற்றும் 06.02.1996 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5017 இல் குறிப்பிடப்பட்ட துண்டுகள் எக்ஸ் மற்றும் வை ஆகிய இரண்டினதும் ஓர் ஒன்றிணைப்பாக இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டுள்ள துமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு எக்ஸ் இன் எல்லைகளாவன - வடக்கு : மருதானை பொலிஸ் நிலைய வளவுகள் ; கிழக்கு : ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, வரிமதிப்பு இல. 77 ; தெற்கு : ஸ்ரீ வஜிரஞான மாவத்தை மற்றும் துண்டு வை; மேற்கு : துண்டு வை மற்றும் ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, வரிமதிப்பு இல. 63, இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 750 இற்கு அமைய இருபத்தொன்பது தசம் நான்கு ஐந்து (0ஏ. 0றூ. 29.45 பே.) விஸ்தீரணமுடையது. கொழும்பு காணி பதிவகத்தில் தலைப்பு டி 80/55 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-602

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.